2014

2014

No. of Printed Pages : 3

**4351**

Register Number | | | | | | | |

**Second Year**

701857

# இந்தியக் கல்விமுறை

# INDIAN EDUCATION SYSTEM

(Tamil Version)

நேரம் : 3 மணி ] [ உச்ச மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

**I.** **அனைத்து** வினாக்களுக்கும், ஒவ்வொன்றிற்கும் **100 சொற்களுக்கு** மிகாமல் விடையளிக்கவும். **15x2=30**

1. கல்வி வரையறைகள் எவையேனும் நான்கினை உமது சொந்த வார்த்தைகளில் எழுதுக.
2. பௌத்தக் கல்வியின் அடிப்படை போதனைகள் நான்கினைக் கூறுக.
3. இயற்கையில் கல்விக் கொள்கையின் இரண்டு நோக்கங்களை கூறுக.
4. பிறரோடு சேர்ந்து வாழும் திறனை குழந்தைகளிடம் வளர்க்கும் நான்கு முறைகளைக் கூறுக.
5. ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் தரப்படவேண்டிய விழுமக் கல்விச் செயல்பாடுகள் நான்கினைக் கூறுக.
6. அனைத்து மாணவர் சேர்க்கையில் உள்ள இடர்பாடுகளில் நான்கினைக் கூறுக.
7. ''பாலின வேறுபாட்டிற்கு பள்ளி அமைவிடமும் ஒரு காரணம்'' -ஏன்?
8. ஆங்கில பாடத்தில் போதிய அடைவு இல்லாமைக்கான நான்கு காரணங்களை அடையாளம் காண்க.
9. பொருள் சார்ந்த, பொருள் சாரா பண்பாடுகளை வேறுபடுத்துக.
10. மக்களாட்சி பற்றி ஆபிரகாம் லிங்கன் கூறிய கருத்திலிருந்து நீவிர் வருவிக்கும் இரு கருத்துக்களைக் கூறுக.

[ Turn over

11. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் (DPEP) தனிச்சிறப்புகள் இரண்டினைக் கூறுக.

12. ''நவோதயா பள்ளிகள் மாநில அரசின் கல்வி வாரியத்திற்கு உட்படுவதில்லை'' - காரணம் கூறுக.

13. இந்தியக் கல்விக் குழு (1964 - 66) பார்வையில் தேசிய ஒருமைப்பாடு என்பதன் பொருள் என்ன?

14. ஒரு முன்மாதிரி ஆசிரியர் பெற்றிருக்க வேண்டிய பண்புகளில் ஏதேனும் நான்கினைக் கூறுக.

15. பள்ளி மேலாண்மையின் கூறுகளில் 'இயக்குதல்' என்பதன் பொருள் யாது?

## பகுதி - II

II. **எவையேனும் பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் 200 **சொற்களில்** விடையளி. **10x4=40**

16. சமணர்கள் போற்றிய ஆக்கவியல் கல்வி (Constructivism) -யை ஆராய்க.

17. 'மரியா மான்டிசோரியின் புலன் பயிற்சிக் கொள்கையை உமது வகுப்பறையில் எவ்வாறு செயல்படுத்துவீர்' - விவரிக்க.

18. ''மனிதனுக்குள் இயல்பாய் உள்ள திறமைகள் தடையேதுமில்லாமல் வளரக் கல்வி உதவ வேண்டும்'' - விவாதிக்க.

19. சமூக நிலைப் பெயர்வின் நன்மைகள் யாவை?

20. கிராமக் கல்விக் குழுவின் கட்டமைப்பு சார்ந்த பணிகளில் எட்டினை வரிசைப்படுத்துக.

21. ஜார்ஜ் பீட்டர் முர்டாக், பண்பாட்டின் தன்மைகளை எவ்வாறு கூறுகிறார்?

22. குழந்தைகளுக்கு மறுக்கப்படும் ஏதேனும் எட்டு உரிமைகளை அடையாளம் காண்க.

23. அனைவருக்கும் தொடக்கக் கல்வியின் அடிப்படைக் கூறுகளை விவரிக்க.

24. தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு (2005) - குறித்து விமர்சிக்கவும்.

25. தேச ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஆலோசனைகளைக் கூறுக.

26. ஆசிரியர் என்பவர் ஒரு செயல் ஆராய்ச்சியாளர் - விளக்குக.

27. உதவி தொடக்கக் கல்வி அலுவலர் கல்வி மேம்பாட்டுக்காக ஆற்றும் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் யாவை?

## பகுதி - III

**III.** பின்வரும் வினாக்களுக்கு **500 சொற்களில்** விடையளிக்கவும். **3x10=30**

**28.** (அ) மகாத்மா காந்தியின் கல்விக் கொள்கையை இன்றைய கல்விக் கொள்கையோடு ஒப்பிடுக.

**அல்லது**

(ஆ) அமைதிக் கல்வியின் இன்றைய அவசியம் குறித்து விவாதிக்கவும்.

**29.** (அ) பெண்ணுரிமை என்பது ஆண்களால் வழங்கப்படும் கொடையா அல்லது அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகையா? உமது விடையை நியாயப்படுத்துக.

**அல்லது**

(ஆ) அனைவருக்கும் கல்வித்திட்டம் தொடர்வெற்றி பெற தமிழக அரசு கைவிடாது இருக்க வேண்டிய நலத்திட்டங்களாக நீவிர் கருதுபவை யாவை?

**30.** (அ) ஆசிரியர்களின் பணித்தரத்தை மேம்படுத்துவதில் பின்வரும் நிறுவனங்களின் பங்கை விவரி.

(i) தேசியக் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் குழுமம் (NCERT)

(ii) மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் (DIET)

(iii) வட்டார வள மையம் (BRC)

(iv) பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையம் (CRC)

**அல்லது**

(ஆ) தலைமையாசிரியரின் பண்பு நலன்கள் மற்றும் கடமைகள் யாவை?

-oOo-